நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், சர்க்கார் மாமுண்டி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை – திருமதி. ஆர். சங்கீதா

ந.க. எண் - 01/2023/

நாள் -30.09.2023

பொருள் : புதிய மனைபிரிவு – நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், சர்க்கார் மாமுண்டி ஊராட்சி மற்றும் கிராமத்திய ச.நெ. 36/3B 0.615 ஏக்கர் (அ) 2482.00 அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள புதிய மனை பிரிவிற்கு ஊராட்சி மன்றத்தின் அங்கீகாரம் வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர் திரு. சிவசங்கர் சங்கர் பாலாஜி 132/2 மணியகாரர் வீதி, ஆட்டையாம்பட்டி, சேலம் மாவட்டம் என்பவரின் விண்ணப்ப நாள் –
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் தொழில்நுட்ப இணையவழி ஒப்புதல் ந.க.எண். NML/DXWOSR3/9980/2023. நாள் – 26.04.2023,
3. நாமக்கல் மாவட்ட மேலாண்மை இணை இயக்குனர் அவர்களின் கடிதம் ந.க.எண். இ4/8160/2021 நாள் – 15.09.2021
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 19799/2020/பேர நாள் – 15.09.2021,
5. அரசாணை எண். 138 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை நாள் – 04.06.2004
6. அரசாணை எண். 79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ 4(3)த் துறை நாள் – 04.05.2017
7. அரசாணை எண். 141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த் துறை நாள் – 23.09.2020
8. அரசாணை எண். 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த் துறை நாள் – 09.12.2020
9. அரசு கடிதம் எண். 19113/நவ 4(3) 2017–1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் – 03.08.2017
10. நகர் ஊரமைப்பு ஆணையர் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13682/ 2017/LA1 நாள் – 08.09.2017
11. சர்க்கார் மாமுண்டி ஊராட்சி பல்வகை இரசீது எண். 20799/ 29.09.2023,
12. திருச்செங்கோடு சார்நிலை கருவூலக E-Challan எண். 20230429002466 நாள் – 28.01.2022
13. சர்க்கார் மாமுண்டி ஊராட்சி மன்ற தீர்மானத்தின்படி

**உத்தரவு,**

பார்வை2இல் கண்ட உதவி இயக்குனர் நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் நாமக்கல் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி கடிதத்தின்படி, நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, சர்க்கார் மாமுண்டி ஊராட்சியில் கிராம சர்வே எண். ச.நெ. 36/38 0.615 ஏக்கர் (அ) 2482.00 அடி ஏக்கர் பரப்பளவில் அமையும் புதிய குடியிருப்பு மனைபிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ளது. அதன்படி கீழ்க்கண்டவாறு செலுத்தியுள்ளார்.

**(1) நிலப்பயன் மாற்றக் கட்டணம்**

உத்தேச மனை பிரிவின் பரப்பு 3.00 ஏக்கர்ருக்கு பார்வை5ல் காணும் அரசாணையின்படி நில பயன்மாற்றக் கட்டணம் சந்தை மதிப்பில் 3% (134500x0.615 ஏக்கர் x 3% 100)ஐ 4200/–ஐ திருச்செங்கோடு சார்நிலை கருவூலகத்தில் E-Challan மூலம் செலுத்தியுள்ளார்.

**(2) கூராய்வுக் கட்டணம்.**

பார்வை6இல் காணும் அரசாணையின்படி கூராய்வுக் கட்டணம் (12 மனைபிரிவு X ரு. 1000 = 12000) (ரு. 12000/– ரூபாய் பனிரெண்டாயிரம் மட்டும்) பார்வை11ன்படி, செலுத்துச்சீட்டு மூலம் ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

மேற்படி கட்டணங்களை செலுத்தப்பட்டதன் அடிப்படையில் பார்வை13இல் காணும் ஊராட்சி மன்றத் தீர்மானத்தின்படி, சர்க்கார் மாமுண்டி கிராம சர்வே எண். 36/3B 0.615 ஏக்கர் (அ) 2482.00 அடி நிலப்பரப்பில் 12 மனைகள் கொண்ட புதிய மனை பிரிவிற்கு சர்க்கார் மாமுண்டி மன்றத் தீர்மானத்தின் மன்ற அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு புதிய மனை பிரிவு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்.**

1. பார்வை2இல் காணும் உதவி இயக்குனர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டும்.
2. உத்தேச மனையிட தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடத்தில் உள்ள அளவு விவரங்களை அனுமதியின்றி எக்காரணத்தை கொண்டும் மாற்றக்கூடாது.
3. ஒப்புதல் வழங்கப்படும் மனையிடம் குடியிருப்பு வீடுகள் அமைப்பதற்கு மட்டும் அனுமதிக்கப்படுகிறது. அபாயகமான மற்றும் அருவருக்கத்தக்க தொழிற்சாலை ஏதும் ஏற்படுத்த அனுமதி இல்லை.
4. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து செலுத்த வேண்டிய இருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்பட்டால் உரிய தொகையினை மனுதாரர் செலுத்த வேண்டும்.
5. அரசின் கொள்கை அளவிலான மனை ஒப்புதல், அரசு மாற்றம் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அதன் உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவர் ஆவார்.
6. பத்திரப்பதிவு மற்றும் நில உரிமை தொடர்பாக ஏற்படுத்தப்படும் சிவில் மற்றும் இதர வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.
7. திறந்தவெளி இடத்திற்காக நிலத்தின் வாயிலாக மனுதாரரால் விற்பனை செய்யப்பட உள்ள மனை நிலங்களுக்கான உயர் அழுத்த / சாதாரண மின் அழுத்த மின்சார பாதை (லைன்) அமைத்து மின்சார வசதி செய்து கொள்ள அனுமதி இல்லை.
8. விற்பனை செய்யப்பட்டு ஒவ்வொரு மனையும் பத்திரபதிவு செய்யும்போது மனைப்பரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திரப்பதிவு செய்திட வேண்டும்.
9. மேற்குறிப்பிட்ட நிபந்தனையை மீறினாலோ, மனுதாரரால் அளிக்கப்பட்ட விபரங்களை சரியானவை அல்ல என்று ஏதேனும் பின்வரும் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இம்மனை ஒப்புதல் முன்னறிவிப்பு இன்றி இரத்து செய்ய ஏதுவாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
10. மனைப்பிரிவில் ஊராட்சி, மின்சார வாரியம், இதர அரசு துறைகள் மற்றும் பொது மக்கள் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் எவ்வித மாறுபாடுகளும் செய்யக்கூடாது.

R. Se... 30/09/23

**தலைவர்,**
**சர்க்கார் மாமுண்டி ஊராட்சி,**
**மல்லசமுத்திரம ஒன்றியம்,**
**நாமக்கல் மாவட்டம்.**

**பெறுதல்,**

திரு. சிவசங்கர் சங்கர் பாலாஜி
மாமுண்டி அக்ரஹாரம் கிராமம்,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம்

**நகல் –**

1. உதவி இயக்குநர் நாமக்கல் மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களுக்கு
2. சார்பதிவாளர், மல்லசமுத்திரம் சார்பதிவு அலுவலகம், நாமக்கல் மாவட்டம்.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), மல்லசமுத்திரம் வட்டாரம்.
4. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) நாமக்கல்.

Scanned with CamScanner